# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2365/76 - 2024 ජනවාරි මස 06 වැනි සෙනසුරාදා - 2024.01.06**

2365/76 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: ATU/LND/04/DO43.
காணி அமைச்சின் இல.: 4-3/24/2020/HA/ 102.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் அத்துரலிய பிரதேச செயலாளர் பிரிவின் 314D, அத்துரலிய மேற்கு கிராம அலுவலர் பிரிவின் அத்துரலிய கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடஸ்டர் வரைபட இலக்கம் 820483 இல் காட்டப்பட்டுள்ள கீழே குறிக்கப்பட்ட காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: நுககஹபிட்டனிய; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தையும், மலசல கூடத்தையும் கொண்டது; விஸ்தீரணம்: 0.0342 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அத்துரலிய பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும் மேலும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிரோஷா எஸ். கமகே,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் உத்தியோகத்தர்.
அத்துரலிய.

பிரதேச செயலகம்,
அத்துரலிய.
2024, சனவரி 03.

EOG 01 - 0057


1A - G 41202 — 14 (2024/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*